நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

விலை 5/-

ஒக்டோபர் 91

இதழ் 11



# பேச்சுவார்த்தை என்கிற பம்மாத்து!

சொல்லுக்கும் செயலுக்கும் இடையேயுள்ள தூரத்தைப் பற்றி பாரதி தன்னுடைய கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருக்கின்றான். சொல்வதொன்று செய்வதொன்றாக இருப்பவர்களை பாரதி 'மனிதர்' என்ற வகைக்குள் அடக்கவில்லை என்பது சொல்லாமலே தெரிந்த அம்சம். உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்றும் பாரதி தான் சொன்னான்! "உண்மையே ஒளி!" என்று வேறு யாரோ சொல்லித் தொலைத்திருக்கிறார்கள். அவர்கள் 'ஒளி' யைக் கருதினார்களா அல்லது உண்மையே ஒளித்துக் கொள் என்று சொன்னார்களா என்பது தெளிவில்லை. இன்று யோசித்துப் பார்க்கின்றபோது உண்மையை ஒளி என்று, ஒளிந்து கொள்ளச் சொல்லித்தான் எல்லோரும் கேட்கிறார்கள் என்று தோன்றுகிறது.

*நம்மூர் அரசியலில் என்னதான் நடக்காது?*

சிறைக்கைதிகளைப் பேணுவது தொடர்பாகவும் சித்திரவதை தொடர்பாகவும் "ஜெனிவா கொன்வென்ஷன்" என்று வழங்கப்படும் ஐ.நாடுகளின் ஒப்பந்தத்தில் இலங்கை அரசு 1959ஆம் ஆண்டு ஒப்பமிட்டது. இது ஒட்டுமொத்தமான ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்தின் ஒரு முக்கியமான அம்சமுமாகும். "சிறைக்கைதிகளையும் அரசியல்கைதிகளையும் மனிதாபிமானத்தோடு பேணுவோம் என்றும் சித்திரவதை செய்யமாட்டோம்; கொலை செய்ய மாட்டோம்" என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பெப்ரவரி மாதம் 1988ஆம் வருடம் ஐ. நா. சபைக்கு உறுதியளித்துக் கையொப்பமிட்டுக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். நம்ப மறுப்பவர்கள் தயவு செய்து அம்னெஸ்டி இன்ரநஷனலின், செப்டம்பர் 1991 அறிக்கையின் 13ம் பக்கத்தைப் பார்க்கவும். ஆனால் உண்மையில் நடப்பதென்ன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.




சொல் வேறு, செயல் வேறு என்பது பாராளுமன்ற அரசியலுக்கு மட்டுமல்ல வீரமும் இரத்தமும் செறிந்த 'விடுதலை' அரசியலுக்குள்ளும் வந்து விட்ட பிற்பாடு 'புனிதம்' என்ற சொல்லே அகராதியிலிருந்து தற்கொலை செய்துவிட்டது. ( சயனைட் அருந்தியா அல்லது தலையில் சுட்டுக் கொண்டா என்பது இன்னும் தெரியவில்லை!)

இந்த லட்சணத்தில் பேச்சுவார்த்தை என்ற 'பம்மாத்து' பழையபடி வந்திருக்கிறது!

யுத்தத்தால் பிரச்சினையை தீர்க்க முடியாது என்று மனப்பூர்வமாக விசுவாசிப்பவர்கள் பேசமுன்வருவதும் பேசுவதும் நல்லது. ஆனால் இனத்துவ யுத்தத்தின் பிரதான நடிகர்களான அரசும் புலிகளும் பேச்சுவார்த்தையை ஒரு பகடைக்காயாகத்தான் பயன்படுத்தியிருக்கிறார்கள். அப்படி இனியும் பயன்படுத்தமாட்டார்கள் என்பதற்கும் ஒரு உத்தரவாதமுமில்லை. எனவே தான், எல்லாரையும் போல நாமும் "கும்பலிலே கோவி ந்தா!" போடுவதுபோல "பேச்சுவார்த்தைகளை வர வேற்கிறோம்!" என்று எழுத மாட்டோம். மாட்டவே மாட்டோம்.

இன்று சர்வதேச அரசியல் சூழல் மாறியிருக்கிறது. இம்மாற்றத்தின் முக்கியமான போக்குகளில் ஒன்று தேசிய இனத் தனித்துவங்களின் அடிப்படையிலான சுயநிர்ணய உரிமை வேட்கை. இது முற்றிலும் நியாயமானதாக இருக்கிற அதே வேளை, இந்த தேசிய இனங்கள் தம்முடைய பூகோள அரசியல் நிலைமைகளைக் கருத்தில் எடுத்து சுதந்திரமான கூட்டாட்சிகளை (Federations) அமைக்கத் தவறினால் மூன்றாம் உலக நாட்டுத் தேசிய இனங்களுக்கு நிரந்தரமான விடுதலை வரப் போவதில்லை. ஏனெனில் மேற்குலகும் பணம் மிதமிஞ்சிய நாடுகளும் பூகோள அரசியல் அடிப்படையில் EEC என்றும், ஸ்கண்டினேவியா என்றும் தமது தனித்துவம் கெடாமலே ஒன்றாகச் சேர்கிற போது வறிய, மூன்றாம் உலக நாடுகளான நாமும் அதற்குச் சமமான அல்லது தாக்குப் பிடிக்கக் கூடிய அமைப்புக்களை உருவாக்குவது நீண்டகால நலன்களுககு அவசியம். இதனை "பேச்சுவார்த்தை" க் காரர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய புரிதலோடு பேச்சுவார்த்தை வெற்றி பெறுவதற்கு மேலும் தேவையானவை; இதயசுத்தி; திறந்த மனது; விட்டுக் கொடுப்பு; மக்களுக்கு உண்மையைச் சொல்லுதல்.



*யாரிடம் இருக்கிறது இது?*

திரு. தொண்டமான் போனாலென்ன அதியமான் போனாலென்ன மேற்சொன்ன அடிப்படை இல்லா விட்டால், எல்லாம் மாயமான் தான்.

திரு. தொண்டமானுக்கு மிஞ்சப் போவது அந்த நிலையில் அவர் யாழ்ப்பாணம் போனால் 'தம்பி பிரபாகரனைக் கண்டேன்; கைதொட்டேன்; சிலிர்த்தேன் சில்லிட்டேன்!" என்ற "அற்புத" அனுபவம்!

மற்றவர்களுக்கு - 0!

சகல



**அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!**



நன்றி - நூலகத்திட்டம்



## வக்கிரம் என்கிறார் சேகரம்

சரிநிகர் ஜீலை/ ஒகஸ்/ செப், இதழ் கண்டேன். விசனத்திற்குரிய ஒரு கவிதை பிரசுரமாகி இருந்தது. பாலியல் இழிசொற்களை உபயோகிப்பவர் எல்லோருமே டி.எச் லோறன்ஸ் ஆகிவிட முடியாது. தமிழ் மட்டுமன்றிப் பிறமொழிகளிலும் அவ்வாறான சொற்கள் பெண்களை இழிவுபடுத்துமாறோ, பாலுறவையும், பாலுணர்வையும் கீழ்மைப்படுத்துமாறோ பயன்படுவது கண்கூடு. முன்பின் யோசியாமல் ஒருவர் இன்னொருவரை இத்தகைய வசைச் சொற்களால் ஏசுவதுண்டு. முதிர்ச்சி எய்தாத இளைஞர்கள் (பாடசாலை உயர்வகுப்பு/பல்கலைக் கழக முதலாண்டுகள்) இவ்வாறான பேச்சில் ஒரு விதமான மனக்கிறக்கம் அடைவதுண்டு. (இது பருவக் கோளாறு தொடர்பானது.) "கவிதை" என்று நினைத்து எதையோ எழுதியவர் அத்தகைய ஒருவராயின் ஆசிரியராவது கூடியபொறுப்புடன் பிரசுரம் பற்றிய முடிவை எடுத்திருக்கலாம். அந்த நீண்ட சொற்கோவையில் இருந்தது அபத்தம், இல்லாதது கவிதை. தயவு செய்து பாலியல் விடயங்களில் கொஞ்சம் பண்பான நடையை ஊக்குவிப்பீர்களாயின் பத்திரிகைக்கு நல்லது. "....அண்ணாந்து/ கொட்டாவி விட்டதெல்லாம் கூறு தமிழ் பாட்டாச்சே/ முட்டாளே இன்னமுமா பாட்டு" என்ற புதுமைப்பித்தனின் வரிகளை நாளுக்கு நாள் நினைவூட்டும் புதுக்கவிதை அலட்டல்களின் அபத்தம் போதாதென்று கவித்துவமற்ற ஒரு எழுத்தையும், கீழ்த்தரமான மனப்பான்மையையும் தமிழர் ஒருங்கே கண்டு சகிக்கத் தான் வேண்டுமா? தரமான கவிதை கிடையாவிடில் சரிநிகரில் கவிதையே போடாதீர்கள். கவிதை இல்லாமல் சரிநகர் குடிமுழுகி விடாது.

சிவரமணி பற்றி எழுதியவருக்கு அந்த நல்ல கவிஞர் பற்றி அதிகம் விளங்கவில்லை என்றே நினைக்கிறேன். சிவரமணியின் கவிதைகள் வரட்டுத்தனமான பெண்நிலைவாதத்தை யன்றி ஒரு விரிந்த சமுதாயப் பார்வையை உடையன, இதைக் கட்டுரையாளர் தெளிவு படுத்தத் தவறி விட்டார். சிவரமணி தற்கொலை செய்தார். அது அவரது தெரிவு. இன்றைய சமூகச் சூழலில் அவர் போன்ற நுண்ணிய உணர்வுள்ள ஒருவருக்கு அது தவிர்க்க முடியாத ஒன்றாகக் கூட இருந்திருக்கலாம். இதையெல்லாம் ஆதாரமின்றி ஆராய நாம் யார்? உலகில் தற்கொலை செய்வோரில் ஆண் - பெண் விகிதாசாரம் கவிஞர்களின் விகிதம், தற்கொலை செய்த கவிஞர்களில் ஆண்-பெண் விகிதாசாரம் எல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர அதை எழுதியவர் முற்பட்டாரோ தெரியாது. அதிற்கூட ஒரு முழுமை இல்லை. கட்டுரையாளர் சிவரமணி பற்றிக் கூற முடிந்ததை விடச் சிவரமணியின் கவிதைகள் அவர் பற்றி அதிகம் கூறுவன. கட்டுரையாளர்கள் தங்கள் அக முற்சாய்வுகளை மற்றவர்கள் மீது சுமத்தி அரை வேக்காட்டு விளக்கங்களைத் தருவது தவிர்க்க வேண்டியது. சரிநிகர் அரட்டைக்கும் ஆராய்வுக்குமிடையில் வேறுபாடு காணுமாயின் நல்லது.

சி. சிவேசகரம்.

---


மிதவாதத் தமிழ்த் தலைமைகளிடம் கூட சிங்கள பௌத்த பேரினவாத அரசால் ஒடுக்கப்படுகிற ஒரு இனக்குழுமம் என்ற வகையில் முஸ்லிம்கள் தொடர்பாக எந்தவித பற்றுறுதியும் காணப்படவில்லை என்பதும் வெள்ளிடை மலை.

இன்னுமொருபடி மேலே போய் இந்த மிதவாதத் தமிழ்த் தலைமைகளில் இருந்து இன்றுள்ள ஆயுதக் குழுக்கள் வரை முஸ்லிம்களை தமது நலன்களுக்கு ஆதரவாக வெறும் கையுயர்த்திகளாகவே பாவித்து வந்துள்ளனர் என்கிற இந்த உண்மைகள் குறித்த கட்டுரையாசிரியரின் மௌனம் என்பது வரலாற்றின் ஒரு பக்கத்தின் மறைப்பு என்பதனை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.


புலிகளின் காத்தான்குடி, ஏறாவூர் முஸ்லிம் படுகொலைகளின் எதிர்வினையாக அரச படைகளாலும், முஸ்லிம் குண்டர்களாலும் தமிழர்கள் மீது படுகொலைகள் நிகழ்த்தப் பட்டது உண்மை தான். முஸ்லிம் தலைமைகள் தமிழர் உரிமைப் போருக்கு எதிராக இருந்தனரென்றால் அவர்களை மக்கள் முன் அம்பலப்படுத்தும் அரசியல் மார்க்கத்தைக் கையாள்வதற்குப் பதிலாக இனப்படுகொலையில் இறங்கினர் புலிகள். இதன் உண்மையான பின்னணி யாதாயிருக்கக் கூடுமெனில் அது கிழக்கில் புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குமான அதிகாரப் போட்டியே. அந்த அதிகாரப் போட்டியில் பலியானது அப்பாவி, முஸ்லிம், தமிழ் மக்கள் தான்.

எனவே சுருக்கமாகக் குறிப்பிடுவதானால் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தேசிய உரிமைப் போருக்கு முஸ்லிம் தலைமைகள் எவ்வளவு குந்தகமாக இருந்துள்ளனர் என ஆராயும் கட்டுரையாளர் தமிழர் உரிமைப் போரில் முஸ்லிம்கள் கொண்டிருந்த பங்குபற்றியோ, அப்பங்கை நிராகரித்து அவர்களை விதேசிகளாக்கிய தமிழ் இனவாதத்தின் வளர்ச்சி பற்றியோ, வடகிழக்கில் முஸ்லிம்களின் ஆட்சியதிகாரம் தொடர்பாக தமிழ்த் தலைமைகள் கொண்டிருந்த அலட்சியப் போக்கு பற்றியோ ஆராயாமல் விடுவது என்பது ஒரு தொப்பி புரட்டித் தனம் என்பதைத் தவிர வேறெதையும் குறிப்பிடுவதற்கில்லை.

எம். றஹ்மான்
கல்முனை



## வாசகர் செ(ற)வ்வடி



---

## இன்ஷா அல்லாஹ்!

சரிநிகர் இதழ் 6ல் வெளிவந்த எனது கருத்துக்களை சரிநிகர் இதழ் 7ல் யூ. எம். நிஸார் என்பவர் மறுதலித்து எழுதமுன்றிருக்கிறார்.

"அதாவது நான் சுருக்கமாகக் கருதியது..." என்று இப்போது (இதழ் 7ல்) விளக்கம் கூறியிருப்பது முன்னர் (இதழ் 4ல்) எழுதும் போது இத்தெளிவுகள் அவரது என்பது மட்டுமன்றி தொனிக்கவுமில்லை என்பதற்கு இது சான்றாகும். அது மாத்திரமன்று 'சர்ச்சைக்குரிய விடயம்" என்று சுட்டிக்காட்டப்பட்ட பந்திக்கும், 'சுருக்கமாகக் கருதியதென்ற' பந்திகளுக்கு மிடையில் எவ்வளவோ கருத்து வித்தியாசமிருக்கிறதென்பது ஊன்றிப்படிப்பவர்களுக்கு மறைவானதல்ல.

"முற்றிலும் ஆயுதத்தில் நம்பிக்கை வைத்தல்... (இக்கருத்தை நானும் மிகத்தெளிவாகக் கண்டித்திருந்தேன்) தொடர்பான விளக்கத்தை இப்போது எழுதிவிட்டு, இது இஸ்லாமிய மூலதாரங்களில் எதற்கு முரண்படுகிறதென்று கேட்பது முறையாகுமா? இதனைவிடுத்து "எனது கட்டுரையில் குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய விடயம் பின்வருமாறு....." என்று எழுதிக் காட்டிய விடயத்தின் (பந்தியின் பின்னர் இது இஸ்லாமிய மூலாதாரங்களில் எதற்கு முரண்படுகிறதென்று கேட்டிருக்கவேண்டும். இதனைத் தவிர்த்திருப்பதே நிஸாரின் முன்னைய கருத்தில்-கட்டுரையில் தெளிவு இருக்கவில்லை என்பதே அவர் ஏற்றுக் கொள்வதற்கு இது சான்று அல்லவா?

"அல்லாஹ்வில் நம்பிக்கை வைத்தல்"-எனும் போது தரும் பொருளும் "ஆயுதங்களில் நம்பிக்கை வைத்தல்" எனும் போது தரும் கருத்துக்களும் ஒரே தன்மைகளைக் கொண்டதென்ற கருத்து நிஸாரிடம் இருக்கிறது போலும். அதனால் தான் "நம்பிக்கை வைத்தல்" என்ற 'சொல் நிஸாருக்கு சிக்கலுக்குள்ளாகி விட்டது. உண்மையில் சொல் ஒன்றானாலும் கருத்து வேறுபட்டதாகும்.

முஸ்லிம் எனும் போதே ஏற்றுக் கொண்டவன் என்ற கருத்தையும் தரும். அப்படியானால் "காரியங்களைச் செய்யத்தகுமானவன் அல்லாஹ்" என்ற நம்பிக்கையையும் ஏற்றுக் கொண்டவனே முஸ்லிமாக - இஸ்லாமியனாக இருப்பான் என்பதும் தெளிவானது. இது முஸ்லிம்களுக்குரிய ஓர் அடிப்படைத் தகைமை. இக்கருத்தினை மாட்டிறைச்சி உதாரணங்களுடன் நிஸார் வலம் வருவது எதைக் காட்டுகிறது....?

"உஹது யுத்தத்திலே முஸ்லிம்கள் தோல்வியடைந்தனர். காரணம் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை குன்றியமையாகும்." என நிஸார் தனது புதிய கண்டுபிடிப்பை முன்வைத்துள்ளாரா? என்ற ஐயமும் எழத்தான் செய்கிறது.

பத்ரு யுத்தத்தில் கலந்து கொண்ட ஸஹாபாக்களில் பலர் உஹது யுத்தத்தில் கலந்து கொண்டுள்ளனர். குறிப்பாக அபூபக்கர் (ரலி) உதுமான் (ரலி) அலி (ரலி) போன்ற உயர்ந்த தோழர்கள் பங்கெடுத்திருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை குன்றி விட்டதா?

"ஆயுதங்களினூடாக எல்லாம் வல்ல இறைவன் பாதுகாப்பளிப்பதில்லை. மாறாக மலக்குகள் மூலமாகவே தமது விசுவாசிகளுக்கு பாதுகாப்பளிப்பான்..." என்று திடமாகக் கூறும் நிஸார்-கைபர் யுத்தத்தின்போது மலக்குகளைக் கொண்டு உதவி செய்யாது அல்லாஹ் தவிர்த்ததன் மர்மம் என்ன? என்பதை விளங்குவாரா?

- நாஜுல் ஹக் -

---

## ஒரு தலை நியாயம்!

சரிநிகர் இதழ் 8 இல் வெளிவந்த க. மா. இராசையாவின் 'முஸ்லிம் தலைமையும் தேசிய போராட்டமும்' என்ற கட்டுரை தொடர்பான எனது குறிப்புகள் சிலவற்றை தருகிறேன்.

மேற்படி கட்டுரை யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழலில் அங்கிருந்து வெளியாகும் உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றில் வெளியானது ஒரு திருப்புமுனையாக தென்படுகிற போதும் அங்கு நிலவும் அரசியல் சூழலுக்கேற்ப கட்டுரையில் வரலாற்றினை நெளிவு சுளிவுகட்டு உட்படுத்தியுள்ளார் கட்டுரையாசிரியர்.

கட்டுரையாசிரியர் வடக்கு கிழக்கு முஸ்லிம் தலைமைகளும், அங்கு வாழும் முஸ்லிம் மக்களும் தான் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஊறுபடுத்தி உள்ளார்கள் எனச் சாடியுள்ளார். மாறாக தமிழர்களின் உரிமைப் போர் ஆயுதப் போராகப் பரிணமித்த காலப் பகுதியில் ஆதரவாகக் குரலெழுப்பிய முஸ்லிம் மக்களையும், ஆயுதக் குழுக்களில் அங்கம் வகித்த முஸ்லிம் இளைஞர்களையும் அரசின் கைக்கூலிகளாக இருந்த முஸ்லிம் தலைமைகளை நோக்கித் தள்ளுமளவுக்கு முஸ்லிம்கள் ஒரு இரண்டாவது சிறுபான்மை இனக் குழுமம், அவர்களது இன அடையாளத்துக்கான தனித்துவம், அதிகாரப் பகிர்வு, அதற்கான அதிகார அலகு என்பன பற்றிய எந்தவிதமான அக்கறையுமற்று தமிழ்க் குழுக்களிடமிருந்து தமிழ் இனவாதம் மேற்கிளம்பியுள்ளது என்கிற உண்மையை மிக நாசூக்காக மறந்து அல்ல மறைத்து விடுகிறார். ஏன்

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் - மீளாய்வை நோக்கி

ஏற்கனவே வெளிப்படையான போராட்டங்கள் நடாத்திய தமிழரசுக் கட்சியினரால் எது வித சாதனையையும் செய்ய முடியவில்லை என்ற சலிப்பு இவர்களை ஆட்கொண்டிருந்தது. இச் சலிப்பினால் ஆயுதப் போராட்டமே ஒரே வழி என நம்பினர், பங்களாதேஷ் விடுதலைப் போராட்ட நிலைமைகளும் இவர்களை ஊக்குவித்து இருந்தபடியால் ஒரேயடியாக வெளிப்படையான போராட்டங்களைக் கைவிட்டு ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். போதுமானளவு முன்னணியினரைத் திரட்டாமல், ஒரு படிமுறைத் தலைமைத்துவத்தை உருவாக்காமல், ஆயுத நடவடிக்கையில் ஈடுபட்டமையினால் முக்கியமான தலைவர்களுடன் முன்னணியில் நின்றவர்களும கைது செய்யப்பட்டவுடன் அமைப்பைத் தொடர்ந்து நடாத்துவதற்கு ஆட்கள் இருக்கவில்லை. உண்மையில் குறிப்பிட்டளவாவது முன்னணியினர் இவர்கள் அமைப்பில் திரண்டிருந்தார்கள் என்றால் அதற்குப் பிரதான காரணம் தமிழரசுக் கட்சியின் வெளிப்படையான போராட்டங்களும் நீண்டகால அரசியற் பிரச்சாரமுமே ஆகும். இவ்வுண்மையையும் இவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை.

ஆயுத அமைப்பைக் கட்டுவதிலுள்ள தந்திரங்களைக் கையாளாமையும் இவ்வமை ப்பின் சிதைவுக்கு ஒரு காரணமாக அமைந்திருந்தது. ஆயுத அமைப்பு தலைமறைவாக இயங்க வேண்டிய அமைப்பு. இவ்வமைப்புபைக் கட்டுகின்ற போது மிகவும் அவதானத்துடன் தந்திரங்களை கையாள வேண்டியது அவசியமாகும். வெளிப்படையாக வேலை செய்தவர்களை ஆயுத அமைப்பைக் கட்டும் பணியிலோ அல்லது ஆயுத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியிலோ ஈடுபடுத்துவதைத் தவிர்த்திருக்க வேண்டும். ஆனால் தமிழ் மாணவர் பேரவையில் வெளிப்படையாக வேலை செய்தவர்கள், பகிரங்கக் கூட்டங்களில் பேசியவர்களே ஆயுத அமைப்பைக் கட்டுவதிலும் ஆயுதப் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் ஈடுபட்டிருந்தார்கள். இந்நிலைமை பொலிஸாருக்கு மிக இலேசாக அவர்களை அடையாளம் கண்டு கைது செய்ய உதவியது. அதைவிட ஆயுதத் தயாரிப்பிற்கும், அதனை ஒளித்து வைத்திருப்பதற்கு அவர்கள் பயன்படுத்திய இடங்களும் பகிரங்க இடங்களாகவே இருந்தன. கல்வியங்காடு கொண்டலடி வயிரவர் கோவில், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி சுடலை என்பனவே இவர்களது ஆயுத உற்பத்தி தளங்களாகவும், ஆயுத சேமிப்பு இடங்களாகவும் இருந்தன. இவ்விடங்கள் பகிரங்க இடங்களாக இருந்ததால் இவற்றைப் பொலிஸாரால் இலகுவாகக் கண்டு பிடிக்க முடிந்தது.

முதன்முதலாக புதிதாக ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கி இருந்தமையால் ஆயுத அமைப்புப் பற்றிய அனுபவமின்மையும், போதியளவு முன்னணியின் ஆதரவு இன்மையுமே இதற்கு காரணமாக அமைந்திருந்தது. நுணுக்கமாக அவதானிப்பின் ஒரு ஆயுத அமைப்பிற்குரிய எந்த வித கட்டுப்பாடுகளோ, இரகசியத் தன்மைகளோ, அமைப்பு வடிவமோ இவர்களிடம் இருக்கவில்லை. ஓர் உணர்ச்சி வேகத்தில் ஆயுதங்களைத் தயாரிப்பவர்களாகவும் திட்டங்கள் எதுவும் பெரிதாக இல்லாமல் மேலோட்டமாக ஆயுத நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களாகவுமே இவர்கள் காணப்பட்டனர்.

இக்குறைபாடுகள் எல்லாவற்றிற்கும் பிரதான காரணமாக இருந்தது பொதுவாக மத்திய தரவர்க்க இளைஞர்களிடம் காணப்படும் அவசரப் போக்காகும். இவ்வமைப்பில் இணைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தரப்படுத்தல், வேலை வாய்ப்பு என்பவற்றினால் பாதிக்கப்பட்ட மத்தியதர வர்க்ககுடும்பத்தைச் சேர்ந்தவர்களேயாவர். மத்தியதர வர்க்கத்திடம் இயல்பாகவே காணப்படும் அவசரப் போக்கும், தோல்வியைக் கண்டவுடன் துவண்டுவிடும் தன்மையும் இவர்களிடமும் காணப்பட்டது. இக்குறைபாடும் அமைப்பின் சிதைவுக்குக் காரணமாக அமைந்தது.

இவற்றைவிட இவர்களுக்கு வெளியே வெளிப்படையாக இயங்கிக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியின் ஆதரவு கொஞ்சம் கூட இருக்கவில்லை. இவர்களின் போராட்டங்களில் கிடைக்கும் அரசியல் நலன்களில் தமிழரசுக் கட்சியினர்



சிவகுமாரன்

குளிர்காய விரும்பினார்களே தவிர இவர்களைப் பாதுகாப்பதிலோ அன்றி உதவி செய்வதிலோ அக்கறை செலுத்தவில்லை. உதாரணத்திற்கு உரும்பராய் சிவகுமாரன் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னர் இந்தியாவுக்குச் செல்வதற்கு பண ஒழுங்கு செய்து தருமாறு அப்போது கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராயிருந்த கதிரவேற்பிள்ளையைக் கேட்டபோது அவர் மறுத்திருந்தார். இதனை மனதில் வைத்திருந்த இளைஞர்கள் சிவகுமாரனின் மரணச் சடங்கில் அவர் பேச முற்பட்டபோது அவரைத் தடுக்க முற்பட்டனர்.

இவ்வாறான காரணங்களினால் தமிழ் மாணவர் பேரவை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களில் சிதைவுற்றாலும் தமிழ் இளைஞர்களையும் மாணவர்களையும் திரளாக அரசியலரங்கிற்குக் கொண்டு வந்தமை, ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தாவாக இருந்தமை என்ற வகையில் தமிழ்த் தேசியப் போராட்டத்தின் வளர்ச்சியில் இவ்வமைப்பு முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

ஏற்கனவே ஈழத் தமிழ் விடுதலை இயக்கம் நடாத்திய போராட்டங்கள் இளைஞர்களால் நடாத்தப்பட்ட இளைஞர் பங்கு கொண்ட போராட்டமாக இருந்தாலும் பெருந்திரளாக மாணவர்களையும் இளைஞர்களையும் அரசியலரங்கிற்கு கொண்டு வந்தது மாணவர் பேரவையே ஆகும். இவர்கள் யாழ்ப்பாணத்தில் நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் அதுவரை எந்த ஒரு ஊர்வலத்திலும் கலந்து கொள்ளாத பெருந்திரளான சனக் கூட்டம் திரண்டிருந்தது



அன்னபூர்ணா

இதை விட தமிழரசுக் கட்சிக்குப் புறம்பான புதியதோர் சக்தி தமிழ் மக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு வளர்ந்து வருகின்றது என்பதையும் இது கோடிட்டுக் காட்டியது. இதற்கான ஆரம்பக் கரு ஈழத் தமிழர் விடுதலை இயக்க உருவாக்கத்திலிருந்து ஆரம்பித்தாலும் அக்கருவின் வளர்ச்சியை தமிழ் மாணவர் பேரவையே கோடிட்டுக் காட்டியது. அத்தோடு தனிநாட்டுச் சுலோகத்திற்கான ஆரம்ப கர்த்தாக்களாகவும் இவர்களே காணப்பட்டனர். இவ்வமைப்பின் தோற்றத்துடனேயே இது வரை காலமும் மக்களிடம் இடம் பெற்றிருந்த சமஷ்டி அமைப்பு என்ற கருத்து உடைக்கப்பட்டு இனிமேல் தனிநாடு தான் ஒரேயொரு வழி என்ற கருத்து மேலோங்க ஆரம்பித்தது. இக்கருத்து அடுத்து உருவான தமிழ் இளைஞர் பேரவை மூலமும் மக்களிடம் ஆதிக்கம் பெறத் தொடங்கியதால் தமிழர் விடுதலைக் கூட்டணியும் நிர்ப்பந்தத்தின் பேரில் தனிநாட்டுக் கோரிக்கையை பிற்காலத்தில் முன்வைக்க ஆரம்பித்தது. உண்மையில் த. வி. கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை விரும்பவில்லை. ஆனால் மக்களின் நிர்ப்பந்தம் அவர்களை அக்கோரிக்கையை ஏற்கும்படி செய்தது.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களாகவும் இவ்வமைப்பினரே காணப்பட்டனர். இவ்வமைப்பில் இருந்தவர்கள் தாம் பெற்றுக் கொண்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பிற்காலங்களில் சிறந்த ஆயுத அமைப்புக்களைக் கட்டுவதில் முன்னணியில் நின்றனர். ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியாக இருந்த உரும்பராய் சிவகுமாரன், புலிகள் தலைவர் பிரபாகரன் ஆகியோர் இவ்வமைப்பிலிருந்து வந்தவர்களாவர், தற்போது நுட்பமான ஆயுதங்களைக் கையாள்வதிலும், உருவாக்குவதிலும் எமது இளைஞர்கள் சிறந்தவர்களாக விளங்குவதற்கு மாணவர் பேரவையே ஆரம்பப் புள்ளியாக இருந்தது. இவற்றைவிட இவ்வமைப்பிலிருந்த அரசியல் சக்திகள் அதன் படிப்பினையிலிருந்து முன்னேறிய வகையில் அடுத்த இளைஞர் பேரவையை உருவாக்குவதற்கும் காரணமாக இருந்தனர். இந்த வகையில் தமிழ் இளைஞர் பேரவையின் உருவாக்கத்திற்கும் இவ்வமைப்பே காரணமாக அமைந்தது எனலாம்.

தொடரும்...

## வழி

நம்பிக்கை குலைகிறது.
ஒரு காலத்தில் அப்படி ஒரு காட்டுப்பாதை
இருந்தது எனச் சொல்கிறார்கள்.

ஒரு மாதத்துக்கு முன்னால் கடந்தவர்களும்
இருக்கிறார்கள்

செக்கரில், தோல்வியில்
வீட்டு நினைவுகள் துழாவுகின்றன.

எல்லாவற்றையும் எழுதமுடிகிறதா என்ன!

இன்றைய காலை விழிப்பில்
அதிகமாய் அமுங்கிப் போனேன்
இருபது நாட்களாக இங்கு தங்கியிருந்தேன்.
ஒரு ஒற்றையடிப் பாதையைத்தானும்
கண்டடையவில்லை.



கடக்கப்படாத எல்லை

ஊருக்குத் திரும்பி என்னத்தைச்
சொல்வேன்?

அங்கே எனக்கு
கல்லறை கட்டி எழுதியும் விட்டிருப்பார்கள்.
இந்நாளில் அதில் பட்டி மரங்களும் மண்டி,
பாசி பிடித்தும்
எழுத்துக்கள் அழிந்து சிதிலமடைந்தும் .........

"காட்டுவழியாய் எல்லையைக் கடந்தவன்;
இந்நேரம் தூரதேசத்தில் படித்துக்
கொண்டிருப்பான்;
இந்த ஜென்மத்தில் கெட்டிக்காரன் இனி
தேசத்துரோகி."

இன்னமும்
ஆபத்தான எல்லையைப் பற்றியே இரவில்
கவலைப்படுகிறேன்

மிதிவெடிகளுக்கும்
ஆட்காட்டிக்குருவிகளின்
சிடுசிடுப்புக்களுக்காகவும்
தேசத்துரோகிகளுக்கு விழும்
அடிகளுக்காகவும்
என் ஜீவனே இரவில் பயப்படுகிறது.

பகலில் ஒரு பீடி இழுக்கிறபோது,
எல்லாம் செய்யலாம் போலுள்ளது.

வனாந்தரங்களில்
கரி கொண்டு
பல் துலக்கி
நாள் கழிகிறது.
சாவும் போரும் நகர்கிறது.

புரட்டாதி 1991.

-நட்சத்திரன் செவ்விந்தியன்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஒழுக்கவழவுரை

தென்னிலங்கையில் ஜனாதிபதி பிரேமதாசவுக் கெதிரான ஒழுக்க வழுவுரைப் பிரேரணை எரியும் பிரச்சினையாக மாறியுள்ளது. எதிர்க் கருத்துகள், மாற்றுக் கருத்துகளை பயமின்றி வெளியிடும் ஒரு சுதந்திரத்தை மறுபடியும் கொஞ்சமாவது இச் சூழல் தந்திருக்கிறது. ஒழுக்க வழுவுரைப் பிரேரணை பற்றியும் தமிழ் மக்களின் பங்கு பற்றியும் தனது கருத்தை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் செயலாளர் ச. பாலகிருஷ்ணன் இந்தக் கட்டுரையில் தருகிறார். மாற்றுக் கருத்து இருப்பவர்கள் எழுதலாம்.

-ஆ. ர்.-

இன்று ஜனாதிபதிக்கெதிராக ஒழுக்கவழுவுரைப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பிரச்சினையைக் கொண்டு வருவதில் முன்னணி வகிப்பவர்கள் ஜனாதிபதியினால் பழிவாங்கப்பட்டவர்களே. எனினும் வெறுமனே பழிவாங்கலுக்கெதிராகக் கொண்டு வந்த பிரேரணையாக இதனைக் கருத முடியாது.

ஏனெனில் இப்பிரேரணையைக் கொண்டுவந்த லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோர் ஜனாதிபதியால் பழிவாங்கப்பட்டவர்களாக இருப்பினும் தொழிலமைச்சர் பிரேமச்சந்திரா போன்றவர்கள் பிரேமதாசவின் அன்புக்குரியவர்கள் கூட இப்பிரேரணையின் முன்னணி ஆதரவாளர்களாக இருப்பதிலிருந்து ஒரு மாறுபட்ட தன்மையைக் கொண்டதாக இருக்கும் எனக் கருதலாம்.


பிரதிநித்துவ ஜனநாயக முறையுள்ள ஒரு நாட்டில் சர்வ அதிகாரங்களும் ஒரு தனி மனிதனின் கையில் போகும் போது சர்வாதிகாரியாக உருவெடுக்கும் நிலை தோன்றுகிறது. எனவே அங்கு பாராளுமன்றம் அதிகாரமற்ற ஒரு பொம்மையாக இருக்கும் சூழ்நிலை உருவாகிறது. இத்தகைய தனிமனித ஆட்சியை எதிர்த்தும் பிரதிநித்துவ ஜனநாயக முறையில் ஒரு கூட்டுத் தேவையை வலியுறுத்தும் நோக்கிலும் ஏற்பட்ட தீர்மானமாகவே நாம் இதனைக் கருதலாம்.

லதித் அத்துலத் முதலி அவர்களின் கூற்றுப்படி ஏறத்தாழ 140 பேர் வரையில் இப்பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர். இதில் 45 பேர் ஐ. தே. க. வைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இதில் 7 பேர் தமது பதவிகளைத் துறந்து முன்னணி·, பேச்சாளர்களாக உள்ள 9 பேர் தெரியாமல் அல்லது ஏமாற்றிக் கையொப்பம் வாங்கியதாகக் கூச்சலிடுகின்றனர். சரியாகக் கணிப்பிட்டால் ஐ. தே. க வில் இன்னும் 28 பேர் ஆதரவாக உள்ளனர் எனக் கருதப்படுகிறது. ஆனால் சபாநாயகர் பெயர்களை வெளியிடமுடியாததால் கையொப்பமிட்டவர்கள் பற்றி மகஜர் கொடுத்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

சட்டரீதியாக நோக்குமிடத்து ஐம்பது வீதத்திற்கு மேற்பட்டோர் கையொப்பம் இட்டால் தான் சபாநாயகர் பரிசீலனைக்கு எடுப்பார். இன்றைய சூழ்நிலையில் த.வி. கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் தவிர ஸ்ரீ. ல. சு. கட்சியில் 67 பேரும், ஈ.பி.ஆர். எல்.எப். 5 பேரும், ம. ஐ. முன்னணியில் 3 பேருமாக மொத்தம் 75 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

மிகுதிப்பேர் ஐ. தே. கவில் இருந்துதான் சென்றுள்ளனர். 45 பேரிடம் கையொப்பம் வாங்கி இருந்தால் குறைந்தது 60-70 பேருடன் கதைத்திருக்க வேண்டும். சிலர் மறுத்து இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 45 பேரோ அல்லது அதற்கு மேலானவர்களோ ஜனாதிபதிக்கு தகவல் கொடுக்காமல் இரகசியம் பேணியதிலிருந்து குறிப்பிட்ட பிரிவினர் மாற்றத்தினை வேண்டி நிற்கின்றனர் என்பது புலனாகின்றது. எனவேதான் இதனை ஒரு சாதகமான போராட்டமாக கருதி யாப்பு மூலமான தனிமனித சர்வாதிகாரத்தின் குறை பாடுகளுக்கு இது தீர்வாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

1978ல் ஜனாதிபதி ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டதற்கு சர்வதேச நெருக்கடிகளும், நாட்டின் தேவைகளும் காரணமாகின்றன. இந்த நாட்டில் திறந்த பொருளாதார அமைப்பை ஏற்படுத்தி, துரித பொருளாதார வளர்ச்சியை பேணுவதற்கு, துரித தீர்மானம் எடுக்கும், நிறைவேற்று



அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை அவசியம் என உணரப்பட்டது. இதன் மூலம் பிறநாட்டு மூலதன அதிகரிப்பை ஏற்படுத்தி தேவையான தீர்மானங்களை எடுக்கலாம் என சர்வேதச நிறுவனங்கள் இலங்கையை வற்புறுத்தி. இருக்கலாம்.

எது எப்படி இருப்பினும் 78 காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி ஆட்சி முறையினை இன்றைய எதிர்ப்பு முன்னணியினர் ஏற்றுக் கொண்டவர்களே. காரணம் அக்காலப் பகுதியில் இம் முறையினால் ஏற்படும் தாக்கங்களை அவர்கள் சரிவர உணராது இருந்திருக்கலாம். மேலும் ஜே. ஆரின் ஆட்சியில் அவர் அமைச்சரவையில் விடயங்களை கலந்து ஆலோசிப்பதில் தவறவில்லை என்ற நிலைப்பாடும் நிலவுகிறது. ஜே. ஆரை பொறுத்த வரை ஏற்கனவே தான் எடுத்த முடிவைத்தான் நடைமுறைப்படுத்துபவராக இருந்தாலும் அதனை வெளிப்படுத்தாமல் அமைச்சரவையில் உள்ளவர்களை கலந்து ஆலோசிக்கும் நிலை இருந்தது என்ற கருத்தையே இன்றைய எதிரணியினர் முன்வைக்கின்றனர்.

இதற்கு பல சந்தர்ப்பங்களை நாம் நினைவு கூரலாம். உதாரணமாக திருமதி பண்டார நாயக்காவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்ட போது அதற்கு எதிராக காமினி திஸநாயக்கா தொடர்விவாதம் புரிந்ததும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இன்றைய ஜனாதிபதி உள்ளும் புறமும் வெளிப்படையாக எதிர்த்ததும், குறிப்பிடத்தக்கவை. எனினும் அன்றைய ஜனாதிபதி இவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் இன்றைய ஜனாதிபதியோ தனது சர்வ அதிகாரங்களைப் பயன்படுத்துவது மட்டும் அல்லாமல் அமைச்சரவை நடவடிக்கைகளிலும் பாராளுமன்ற நடவடிக்கைகளிலும் முழுக் கட்டுப்பாட்டையும் செலுத்துகின்றார். அத்தோடு அமைச்சர்களையோ அல்லது எம். பீக்களையோ அல்லது அவர்களின் தலைமைத்துவத்தையோ எவ்வகையிலும் மதிக்காமல் அடிமைகளாக நடாத்தும் சுபாவத்தை கொண்டு விளங்குகிறார், என எதிரணியினர்குற்றம் சாட்டுகின்றனர்.

அவ்வாறாயின் சர்வ வல்லமை படைத்த தனிமனித ஆட்சியில் இருந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட பாராளுமன்ற முறைக்கு மாற்றுவதனால் ஜனநாயகப் படுத்தலை மேற்கொள்ள முடியுமா என்பதும் கேள்வியாகவே உள்ளது.

இன்று ஜனநாயக சம்பிரதாயங்கள் மேலோங்கி நிற்கும் அமெரிக்கா பிரித்தானியா போன்ற நாடுகளில் சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதியோ அல்லது பாராளுமன்றமோ தவறான வழியில் போக முற்படும் போது அவற்றை சுட்டிக் காட்டி வீழ்த்தவோ விளக்கவோ அல்லது மாற்றவோ கூடிய மரபினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளார்கள். இதற்குக் காரணம் சுதந்திரமான பத்திரிகைத் துறையும் தனித்துவமும், சுதந்திரமும் வாய்க்கப்பெற்ற நீதி மன்ற அமைப்பும் இருப்பதாகும்.

ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் இப்படியானதொரு சம்பிரதாயம் இல்லை.

ஏனென்றால் இங்கே அரசியல் அதிகாரம் என்பதோ அல்லது ஆட்சிமுறை என்பதோ ஆட்சி நலன் கருதியதல்லாமல் தம் விருப்பு வெறுப்புகளுக்காக பயன் படுத்தப் படுகின்றது. கட்சிகள் யாவும் தமது கட்சி நலன்களைப் பாதுகாப்பதற்காக, மக்களை மாற்றுவதற்காக தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துகின்றன. இதன் மூலம் தவறான தகவல்களை மக்களுக்குக் கொடுத்து தமது அதிகாரத்தை நிலைநிறுத்துவதிலேயேமுனைகின்றன.

1970-77 காலப்பகுதியில் நம் நாட்டில் பாராளுமன்ற நிறைவேற்று அதிகார முறைமையே காணப்பட்டது. இருந்தாலும் கூட அக்காலப்பகுதியிலிருந்த பிரதம மந்திரியும் சர்வாதிகாரியாக மாறிய சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்கின்றன.

ஆகவேதான் உண்மையான ஜனநாயக சம்பிரதாயங்களை நிலைநாட்ட ஏற்படுத்தப்படும் அதிகார மாற்றமானது வெறுமனே இயந்திரமயமாக்கப்பட்டதாக அமைய முடியாது பாராளுமன்றத்துக்கு மாற்றப்படும் நிறைவேற்று அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டாமல் இருப்பதைப் பாதுகாக்கக் கூடிய அரசியல் சரத்துகள் யாப்பில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் இதனை Check and Balance என்று சொல்வர்.

எனவே தவறுகள் ஏற்படும் போது அதனைச் சுட்டிக் காட்டுவதற்கும், விளக்குவதற்கும், தடுத்து நிறுத்துவதற்குமுரிய வழிமுறைகள் உணர்வு பூர்வமாக ஏற்படுத்தும் வரை அதிகாரம் என்பது சரியான முறையில் பயன்படுத்தப்படும் என்பதை உத்தரவாதப் படுத்த முடியாது. இன்று நடைமுறையிலுள்ள யாப்பை எடுத்துக்கொள்வோமானால் அது திட்டவட்டமான ஒரு வரையறையைக் கொண்டிருக்கவில்லை. தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய பிரேரணையே இதற்கு சிறந்த உதாரணமாக விளங்குகின்றது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை ஜனாதிபதிக்கு எதிராக கொண்டுவரும் வேளையிலே உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு அவருக்கு அதிகாரமில்லை. ஆனால் ஒத்திவைப்பதற்கு அதிகாரமுண்டு என யாப்பிலே குறிக்கப்பட்டுள்ளது. சட்டரீதியாக அவருக்கு அந்த அதிகாரம் இருந்தாலும் பொதுவாக நோக்குமிடத்து தன்னைப் பாதுகாப்பதற்காக எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இத்தகைய குறைபாடுகளினால் இப் பிரேரணை சிலவேளை தோற்கடிக்கப்படக் கூடும். மேலும் அரச தரப்பினர் ஒருதலைப் பட்சமாக தொடர்புசாதனங்களைத் தமது பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்துகின்றமையும் பாராளுமன்ற உறுப்பினர்ளை அழைத்து நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் கையொப்பங்களைப் பெறுகின்றமையும், தோற்கடிப்பதற்கான பிரதான செயற்பாடுகளாக விளங்குகின்றன. மறுபக்கத்தில் எதிரணியினரின் கூற்றுப்படி விவாதம் பாராளுமன்றத்துக்கு வரும்போது இரகசிய வாக்கெடுப்புக்கு விடப்படும்பொழுது வெற்றி பெறும் என்று நம்பப்படுகின்றது. இந்நிலைமைகளை நோக்கும் போது வெல்பவர் யார், தோற்பவர்யார் என்று உடனடியாகக் கூறமுடியாது.

அதேவளை பாராளுமன்றத்திலே கூடுதலான ஆதரவினை எதிரணியினர் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்திலே இந்தத் தீர்மானத்தினை வைத்துக் கொண்டு பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும். மாறாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய அணியில் வெற்றி பெறவும் முடியும். அதற்குரிய வெற்றிவாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளும் சகல வழிகளையும்



பிரேமதாச சார்பானவர்கள் கையாளுவது அவர்களின் கீழ்த்தரமான பிரச்சாரங்கள் மூலம் புலப்படுகின்றது. இதன் மூலம் இப்போராட்டத்தின் உண்மையான தன்மையை மூடிமறைத்து பிரேரணையைத் தோல்வியடையச் செய்ய முனைந்து வருகின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும் அரசாங்க சார்பாகச் சிந்திக்கும் போது பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்குகிறார்களென்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. ஏனெனில் இவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கும் அதே வேளையிலே லலித், காமினி ஆகியோருடன் கட்சியின் செயலாளர் பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்துள்ளனர். இப்பேச்சுவார்த்தை தோல்வியில் முடியும் என்றாலும் கூட தனிமனித நிறைவேற்று அதிகாரம் என்பதில் இருந்து ஒரு கூட்டு அதிகாரப்பகிர்வாக பாராளுமன்ற ஜனநாயகத்தை கொண்டுவர முற்படுவது வரவேற்கத்தக்கதே.

ஆனால் பாராளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரம் இருப்பதனை வரவேற்கும் அதே வேளை நாட்டின் தலையாய பிரச்சினையாகக் கருதப்படும் இனவாதப்பிரச்சினைக்கு தீர்வு காணுமா என்பது சிந்திக்க வேண்டியதே.

ஏனெனில் இலங்கையிலே உள்ள இரு முக்கிய கட்சிகளான ஸ்ரீ. ல. சு. க, ஐ. தே. க. போன்றவை பேரினவாதம் மிக்கவையாகவும், அதன் மேலாட்சியை ஏற்றுக் கொண்டவையுமாகவே காணப்படுகின்றன. எனவே அத்தகைய மேலாட்சிக், கருத்து நிலைக்கு முதன்மை கொடுத்து இயங்கும் பாராளுமன்றம் இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வை முன்வைக்குமா? என்பது சந்தேகமே ஆகும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் பெரும்பான்மை இனத்துவக்குழு சிங்களவராக இருப்பதனால் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே பாராளுமன்ற அதிகாரத்தினை கட்டுப்படுத்துபவர்களாக இருப்பர். எனவே நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டாலும் சிறுபான்மை இனத்துவக் குழுக்களின் உரிமையை அப்பாராளுமன்றம் எவ்வளவு தூரம் மிதிக்கும் என்பதை கடந்தகாலங்களின் அனுபவம் மூலம் புரிந்து கொள்ளலாம். ஆனால் மறுபக்கத்தில், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நடைமுறையில் இருந்ததே காரணம் ஆகின்றது.

எனினும் பாராளுமன்ற நிறைவேற்று அதிகாரம் நிலவிய காலப்பகுதிகளை எடுத்து நோக்கின் சிறுபான்மையினரின் உரிமைகள் பெருமளவுக்கு நசுக்கப்பட்டுவந்தமையையும் காணமுடிகின்றது. உ+ம் பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதும் 66ம் ஆண்டு டட்லி காலப்பகுதியில் தமிழ் மொழி அமுலாக்கம் தடுக்கப்பட்டதும் பிரதான சம்பவங்களாக விளங்குகின்றன. அதாவது ஜனநாயக மயப்படுத்தலை பயன்படுத்துவதாகக் கூறும் இச் சக்திகள் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு ஒரு உற்சாகத்தை அளிக்கும் நிலைப்பாடுகளையே காண முடிகின்றது.

இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை அதற்கான தீர்வு எங்கு இருக்கின்றது என்ற அடிப்படையில்தான் நாம் சிந்திக்க வேண்டும். மத்திய அரசுடன் தொடர்பில்லாத ஒரு தீர்வு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்குமேயானால் இதைப்பற்றி தமிழ்க்கட்சிகள் எந்த சிரத்தையுமில்லாது நடந்து கொள்ளலாம்.


ஆனால் என்னைப்பொறுத்த வரையில் இந்திய நிலைப்பாடும், இலங்கையின் புவிசார் அரசியல் நிலையையும் நோக்கும் போது தமிழ்மக்களின் பிரச்சினையை ஏதோ

நன்றி - நூலகத்திட்டம்



# ஆணையிறவு?

இ. சங்கரன்




செப்டம்பர் 24 எல்லோரும் எதிர்பார்த்தபடி இல்லாமல் கொஞ்சம் சப்பென்று போயிற்று. அவசரகாலச் சட்டம் 49 அதிகப்படியான வாக்குகளால் ஐ. தே. க. அதிருப்தியாளர்களாலும் சேர்ந்து நிறைவேற்றப்பட்டதால். ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்னர் ஐ. தே. க. அதிருப்தியாளர் எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து ஜனாதிபதி பிரேமதாசவுக் கெதிராகக் கொண்டு வந்த ஒழுக்கவழுவுரைப் பிரேரணனுள் கொழும்பு அரசியலைக் கொஞ்சம் சூடாக்கி இருந்தது. ஐ.தே.க. அதிருப்தியாளர் என்று தம்மைக் கூறிக்கொண்ட இந்தக் குழுவினருக்கு ஜே.ஆர் காலத்தைய முன்னணி அமைச்சர்களான லலித் அத்துலத்முதலியும், காமினிதிஸநாயகவும் தலை மைதாங்குகிறார்கள்.

திட்டமிட்ட வகையில் ஏதாவது ஒரு நோக்கத்திற்காக அரசியலமைப்பைமீறினாலோ, தேசத்துரோகம், இலஞ்ச ஊழல், தவறான நடத்தை, அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றில் ஈடுபட்டாலோ, தார்மீகக் கேடு தொடர்பான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலோ நாட்டின் தலைவருக்கெதிராக இவ்வாறான ஒரு பிரேரணையைக் கொண்டு வரலாம். கூடவே மனோ ரீதியான உடல்ரீதியான பலவீனம் காரணமாக இயங்க முடியாத நிலை ஏற்பட்டாலும் இவ்வாறான ஒரு பிரேரணையைக் கொண்டு வருதல் இயலும். பிரேரணை இதுவென்றே கூறப்படுகிறது.

அந்த அடிப்படையில் அதாவது இதுவரை கேள்வி வரன் முறைகளுக்கு அப்பாற்பட்டதாக கேள்வி எழுப்புவதே அபவாதம் என்று பிரமையூட்டப்பட்ட சர்வ அதிகாரங்களும் படைக்கப்பட்ட இந்த சர்வ அதிகாரம் முன்னைய இறை வழிக் கோட்பாட்டின் இன்றைய நவீன வடிவம் என்று கூறலாமோ?) ஒரு ஜனாதிபதிக்கெதிராக, ஜனாதிபதி அமைப்பு முறைக்கெதிராக உருவாகியுள்ளது என்றால் அது வரவேற்கப்பட வேண்டிய விடயம் தான்,

சரி, இனி இந்த ஐ. தே. க. அதிருப்தியாளர்கள் கூறுகிற விடயங்களைக் கவனிப்போம்; ஜனாதிபதி பிரேமதாசவுக் கெதிராக ஒழுக்கவழுவுரைப் பிரேரணையைத் தாம் கொணர்ந்திருப்பினும் அதனூடாக தமது இலக்கு என்ன வெனில் சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட பாராளுமன்ற ஆட்சி முறை ஒன்றை கொண்டுவருவதே என்கிறார்கள்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை தனி மனித சர்வாதிகாரம் கொண்ட ஆட்சி முறையாக வர்ணிக்கும் இவர்கள் அதற்கு ஆதாரவாக ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் அமைச்சரவை அங்கீகாரமின்றி புலிகளுக்கு ஆயுதம் வழங்கியது முதல், கலினோக்காரர்களுடன் கொண்டிருந்த தொடர்புவரை அம்பலப்படுத்தி இந்த தனிமனித சர்வாதிகாரத்தின் மூலம் நாட்டையே காட்டிக் கொடுத்து தேசத் துரோகம் புரிந்துவிட்டதாகவும் பிரச்சாரிக்கிறார்கள்.

கூடவே இதை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று மக்கள் ஆதரவுள்ள போராட்டமாக மாற்றப் போவதாக சூளுரைத்து நுகே கொடையில் முதலாவது பொதுக் கூட்டத்துடன் ஆரம்பித்து கண்டி குருநாகல் என்று பல இடங்களில் பொதுக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

உண்மையில் பிரேமதாச ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்திலிருந்து வட கிழக்கில் என்றாலென்ன தெற்கில் என்றாலென்ன பிணங்கள் தான் ஊர்வலம் போயின. ஆறுகள் சிவப்பாய் ஓடின நிலம் ரத்தம் குடித்து தாகம் தீர்த்தது. மக்கள் தெருவுக்கு வரவே அஞ்சினார்கள். இரவுகள் நரகங்களாய்ப் போயிற்று. வடக்கில் பதுங்கு குழிக்குள் படுத்துக் கொண்டது வாழ்க்கை. தெற்கிலும் கிழக்கிலும் காடுகளுக்குள் ஒழித்துக் கொண்டது அது.

விளைவுகள், தெற்கில் 60 000 பேர் காணாமல் போனார்கள். வடக்கில் கணக்கெடுப்பே ஆரம்பிக்கவில்லை. (படையெடுப்பு முடிந்தால் தானே கணக்கெடுப்பு ஆரம்பிக்க!) தெற்கில் கொதித்துப் போயிருந்த அன்னையர்கள் எமது பிள்ளைகள் எங்கே? என்று குரலெழுப்பினார்கள். மக்கள் மனங்களில் கொதிப்பு வளர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலைமையில் தான் காணாமல் போன ஜனநாயகத்தை மீட்டுத் தருவதாகவும், இந்த எல்லாவற்றுக்கும் காரணம் ஜனாதிபதி ஆட்சி முறையே என்று கூறிக் கொண்டும் கிளம்பி இருக்கிறார்கள் லலித்தும் காமினியும்.

எங்களது பிரச்சினை ஜனநாயகத்தை யார் கொண்டு வருகிறார்கள் என்பதல்ல. அவர்கள் கொண்டு வருவது உண்மையில் ஜனநாயகம் தானா என்பது பற்றியதே.

இதற்கு நாம் பின்னோக்கிப் போய் சில விடயங்களைப் புரட்டிப் பார்ப்பதுடன் சில கேள்விகளையும் எழுப்ப வேண்டியது அவசியமாகிறது.

1977இல் பதவிக்கு வந்த ஜே. ஆரால் சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி என்பவற்றின் வழிகாட்டலின் கீழ் உருவமைத்த தாராளமயமாக்கல், திறந்த பொருளாதாரக் கொள்கை, அந்நியமுதலீடு கோட்பாடுகளுக்கமைய, இவ்வமைப்புக்களாய் கட்டிப் போடுவதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்டதே இந்த சர்வாதிகார ஜனாதிபதி ஆட்சி முறை என்பதை நாம் புரிந்து கொள்வது ஒன்றும் கடினமான விடயமல்ல. 1978 இல் இந்த சர்வாதிகார ஜனாதிபதி ஆட்சி முறை கொண்டு வரப்பட்டபோது அதை ஆதரித்துப் பேசியவர்களுள் இந்த லலித் முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறாயின் இப்போது மட்டும் இந்த ஜனாதிபதி ஆட்சி முறைக் கெதிராகக் குரலெழுப்புவது எவ்வாறு? இது முதலாவது கேள்வி.

மற்றையது; இந்த ஜனாதிபதி ஆட்சி முறையின் ஒப்புமை/ஒவ்வாமைகளை ஆய்வதென்பது இவ்வாட்சி முறை அமுல்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். 1978 இல் ஜே. ஆரின் பதவிக் காலத்தில் இவ்வாட்சி முறை கொண்டு வரப்பட்டிருப்பினும் ஜே. ஆர் காலத்தை தவிர்த்துவிட்டு பிரேமதாச காலத்திலிருந்து ஆய்வது எதற்காக? ஜே. ஆரினால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிற இல-இந்திய ஒப்பந்தமும், திகதியிடப்படாத ராஜினாமாக் கடித சமாச்சாரங்களும் அந்தக் காலத்திற்குரிய உதாரணங்களல்லவா? இது இன்னொரு கேள்வி?

எனவே இவ்விரு கேள்விகளிலிருந்தும் வெளித்தோன்றுவது என்னவென்றால் இந்த ஐ. தே. க அதிருப்தியாளர்கள் தமது நன்மைக்காக ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றிய பூரணமான ஆய்வொன்றினை/விமர்சனம் ஒன்றினை தவிர்த்து வருகிறார்கள் என்பது தான்.

ஜே. ஆரின் ஆட்சிக்காலம் ஒன்றும் புனிதமானதல்ல என்பதும், ஜே. ஆர் காலத்தைய அரசையும் பிரேமதாச காலத்தைய அரசையும் அடிப்படையில் ஏதாவது வேறுபாடு உண்டா எனக்கான நாம் ஆராய்ந்தால் இல்லை என்பதே விடையாக கிடைக்கும், என்பதையும் உணரலாம். (இது பற்றிய விபரங்களிற்கு பார்க்க சரிநிகர் இதழ் பத்தில் சிவா கௌதமனின் கட்டுரை)

அடுத்ததாக இவர்கள் கொண்டுவரப் போகிறதாகச் சொல்கிற பாராளுமன்ற ஆட்சி முறை எத்தகையதாக இருக்கப் போகிறது என்பது பற்றியது. ஏனெனில் ஏற்கெனவே பாராளுமன்ற ஆட்சி முறையில் வாழ்ந்து பெற்ற அனுபவங்கள் எம்மிடம் நிறைய உண்டல்லவா?

1948 இல் மலையக மக்களின் பிரசா உரிமை பறிக்கப்பட்டதிலிருந்து தனிச் சிங்களச் சட்டம் ஈறாக 1972 அரசியல் யாப்பில் சிறுபான்மையினரது உரிமைகளைப் பாதுகாக்கும் 29 வது சரத்து நீக்கப்பட்டது வரையான உதாரணங்கள் இந்தப் பாராளுமன்ற ஆட்சி முறையின் "சிறப்புகளை" விளக்கப் போதுமானது தானே.

இவ்வளவும் சிறுபான்மையினருக்கென்றால் 1971இல் தென்னிலங்கையில் ஏறத்தாழ 15000 பேர் காணாமல் போனது எந்த ஆட்சி முறையின் கீழ் நடந்தது? என்ற கேள்வியும் எழுகிறது (வேண்டுமானால் ஜனாதிபதி ஆட்சியில் காணாமல் போனோர் 60000 பேர், பாராளுமன்ற ஆட்சியில் 15000 பேர் தானே என்று கணக்குப் பார்க்கலாம்.)

உண்மையிலேயே லலித் கூறுவது போல "நாம் மூன்று முக்கிய விடயங்களில் கவனம் செலுத்துவோம், ஐ. தே. க அங்கத்தவரின் நிலை ஐ. தே. க. எம் எம். பிக்களின் நிலை, ஜனாதிபதியின் நிலை." (தினகரன் செப் 10) எனவே இங்கு பிரச்சினை மக்களது பற்றியதல்ல. ஐ. தே. க. பற்றியதே. மேலும் அவர் கூறுகிறார், "தாராளமயப்படுத்தப்பட்ட பொருளாதார அந்நிய முதலீட்டையும் இப்போது நடைபெறும் யுத்த முயற்சியையும் நாம் ஆதரிக்கிறோம்." என்று.

எனவே உள்ளபடியே சர்வதேச நாணயநிதியமும், உலக வங்கியும் மக்களைத் தின்று கொழுக்க இவர்கள் தொடர்ந்து வசதி செய்து கொடுப்பார்கள். கூடவே சிறுபான்மை இனக்குழுமங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபடுவார்கள். இவர்கள் கொண்டு வரப் போகும் பாராளுமன்ற ஆட்சி முறையும் இதைத்தான் செய்யுமென்றால் இதற்கும் ஜனாதிபதி ஆட்சி முறைக்கும் என்ன வேறுபாடு? பிரேமதாச அரசும் இதைத்தான் செய்கிறது, ஜே. ஆர் அரசும் இதைத்தான் செய்தது.

எனவே ஜே. ஆரின் ஐ. தே. கவும், பிரேமதாசவின் ஐ. தே. கவும் சாராம்சத்தில் ஒரே கோட்பாட்டையே தான் கொண்டுள்ளன என்பது நிரூபணமாகிறது. கூடவே லலித் குழுவினரின் பாராளுமன்ற ஆட்சியும் தான். மேலும் இங்கே இவர்களது பிரச்சினை ஜனாதிபதி ஆட்சி முறையா பாராளுமன்ற ஆட்சி முறையா என்பதல்ல. ஐ. தே. கவை கைப்பற்றி அதிகாரத்தில் யார் அமர்வது என்கிறது மட்டுமே. இந்தக் கதிரைப் போட்டியை மக்கள் மயப்படுத்த-பிரேமதாசவிடம் இருந்துதான் இவர்கள் இதைக் கற்றுக் கொண்டார்கள். தந்திரம் தான் பாராளுமன்ற ஆட்சி முறை என்கிற ஏமாற்றுவித்தை.

கூடவே இன்னொன்றையும் நாம் உணர கூடியதாகவுள்ளது. ஜனாதிபதி புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என அதிருப்தியாளர்களும் அதிருப்தியாளர்களது ஒழுக்கவழுவுரைப் பிரேரணை புலிகளின் சதியே என ஜனாதிபதியும் மக்களுக்கு புலிப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். உண்மையில் இது வெறும் புலிகள் பற்றிய பிரச்சினையல்ல. தமிழ் மக்களுக்கு ஆதரவாக செயற்பட்டார்கள் என்று ஒருவரை ஒருவர் குற்றச்சாட்டி சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மீது தமது அரசியல் வாழ்வைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியேயன்றி வேறல்ல.

மொத்தத்தில் எமது தேசத்தின் வரலாறென்பது பிரித்தானிய வழி வந்த பாராளுமன்ற ஆட்சி முறையோ அல்லது அமெரிக்க வழி வந்த ஜனாதிபதி ஆட்சி முறையோ எமக்கு ஒவ்வாதவை என்பதும், அவை அவ்வக் காலங்களில் அவர்களின் தேவையை நிறைவு செய்ய நம்மீது திணிக்கப்பட்டன என்பதையும் நிரூபித்துள்ளது. கூடவே அதிகாரப் பரவலாக்கலில் இந்திய மாநில அமைப்பு (இங்கு சில மாற்றங்களுடன் மாகாணமாக அறிமுகப்படுத்தப்பட்டது) முறையும் தான் ஒவ்வாது போயிற்று.

எனவே நாம் தேட வேண்டியது மக்களது அடிப்படை ஜனநாயக உரிமைகளை மதிக்கின்ற, சிறுபான்மை இனக் குழுமங்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கின்ற, எமது தேசத்திற்கேயான ஒரு அரசியல் முறையையே.

சரி, ஒழுக்கவழுவுரைப் பிரேரணைச் சட்டிக்குள் குதிரை யோட்டம் நடத்துகிற எந்தக் கட்சியினராவது, எந்தப் புத்திசீவிகளாவது இது பற்றிப் பேசுவார்களா?

## ஒழுக்கவழுவுரை...

ஒரு காலத்தில் பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்க்கலாம் என்றே நம்பக் கூடிய தாயுள்ளது. அவ்வாறாயின் தேசிய ரீதியாக ஏற்படும் அரசியல் சூழ்நிலை மாற்றங்களில் அக்கறையில்லாது தமிழ்க் கட்சிகள் ஒரு போதும் இருக்க முடியாது, போராட்டக் குழுக்களைப் பொறுத்தவரையில் அப்படியான ஒரு நிலைமையை எடுக்கலாம். ஏனெனில் அவர்கள் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து அதற்குரிய சாதகமான நிலைமையை, போராட்டத் தளங்களை உருவாக்க முனைபவர்கள்.

எனவேதான் பிரதிநிதித்துவ ஆட்சியோடு தொடர்பு பட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ளவர்கள் இப்பிரச்சினையில் பாராமுகமாக இருக்கமுடியாது.

இன்றைய நிலையில் தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை அவை பாராமுகமாக இருப்பதாகத் தோன்றவில்லை. ஏனெனில் நாட்டில் நடைபெறும் அதிகாரமாற்றம், ஆட்சி மாற்றம் அனைத்துமே தமிழ்மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நடைமுறையில் உணர்ந்துள்ளோம். எனவே இவர்கள் ஒரு Bargaining Process இன் அடிப்படையில் சிறந்த வாய்ப்புகள் எந்தப் பக்கத்திலுண்டு, அதிகளவு ஆதரவு யாருக்குண்டு என்பதை தெரிந்து கொண்டு அந்தப் பக்கத்துக்கு ஆதரவு நல்க வேண்டும். எனவே தமிழ்மக்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டிய காலமாக உள்ளது. ஏதோ ஒரு வகையில் இவர்களுடன் பங்குதாரர்களாகி பிரச்சினையை இவர்களுடன் கலந்து எடுத்துச் செல்வதில் எதிர்காலத்தில் நன்மைகள் உண்டு.

அவ்வாறில்லாமல் இவர்களை ஒதுக்கிவிட்டு தனிநாடு அமைக்க முடியுமானால் அது வேறுபிரச்சினை. ஆனால் தனிநாடு அமைக்கும் சூழ்நிலை உருவாகும் என்பதை நம்புவது அறிவு பூர்வமாக எனக்குச் சிரமமாகவே உள்ளது.

இவ்வகையில் நிலவும் சூழலில் தமது தேவைகளை வலியுறுத்தி நிபந்தனைகளை விதிப்பதனூடாக இத்தகைய சக்திகளுடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்து பிரச்சினையை தீர்க்க முயல்வதே சிறப்பானது.

நன்றி - நூலகத்திட்டம்




# சிங்கள நாடகத்தின் மீது தமிழ் நாடகக் கூத்து மரபின் பாதிப்பு

பேராசிரியர் பி.ஆர். சரத்சந்திர

பேராசிரியர்எதிரிவீர சரத் சந்திரா நவீன சிங்கள நாடக அரங்கச் கலையின் பிதாமகர் ஆவர். ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் அவர் தயாரித்தளித்த மனமே, சிங்கபாகு போன்ற நாடகங்கள் சிங்கள மொழியில் ஒரு தனித்துவமான நாடக அரங்கக் கலையை தோற்றுவித்தன. இன்று சிங்கள நாடகமும் அரங்கமும் மெருகு பெற்ற முழு நேர நாடகர்கள் எண்ணற்றோரைக் கொண்டிருக்கின்றன. குறைந்த பட்சம் 200 சிங்கள நாடகங்களாவது வருடா வருடம் மேடையேறுகின்றன.

ஜூன் 27, 28 ஆம் திகதிகளில் இந்து சமய கலாசார அமைச்சும் இலங்கை மன்றக் கல்லூரியும் இணைந்து நடாத்திய தமிழ் நாடக அரங்கம் பற்றிய பிரச்சினைகள் என்ற கருத்தரங்கின் முதல் நாளன்று சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேராசிரியர் ஆற்றிய உரையை இங்கு பிரசுரிக்கிறோம்.



வரலாற்றின் எலலா கால கட்டத்திலும் தமிழ், சிங்கள பண்பாடுகளுக்கிடையே பரஸ்பர உறவுகள் இருந்து வந்தன. இன்றைய சிங்கள கிராமிய கலாசாரத்தை ஆராயும் பொழுது இவ்வுண்மை ஐயந்திரிபற வெளிப்படுகிறது.

இலங்கையின் சில பாகங்களில் உள்ள சடங்கு முறைகள் பத்தினி, ஐயனார் ஆகிய இந்து தெய்வங்களின் வழிபாட்டினை ஆதாரமாகக் கொண்டவை. "கடுமடுவ" "புனாமடுவ" போன்ற பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்குகள் சிலப்பதிகாரத்தை ஆதாரமாக கொண்டவை. இந்து சடங்குகளை அடிப்படையாக கொண்டே பலவிதமான நாட்டுக் கூத்து வடிவங்கள் உருவாகின. உதாரணமாக "சொக்கரி" எனப்படும் கூத்து, வயலில் நெல்லை அறுவடை செய்து சூடுமிதிக்கும் களத்தில் ஆடப்படுவதாகும். "கமத்த" என அழைக்கப்படும் சூடு மிதிக்கும் களம் வட்டவடிவான அமைப்பைக் கொண்டது. "சொக்கரி" கூத்து எழுந்த பின்னணி அதற்கு உரிய அரங்கை வட்டக்களரியாக அமைக்கும் தேவையை உண்டாக்கியது. புராதன நாடக அரங்குகளான ஆங்கில நாட்டின் "மம்மர்" நாடகங்கள் சமஸ்கிருதத்தின் மெருகு பெறற நாடக வடிவங்கள் ஆகியவற்றிலும் இத்தகைய வட்டக்களரி முறையைக் காணலாம்.

தேரவாத பௌத்த மதம் இந்து மதத்திலிருந்து பல அம்சங்களை உள்வாங்கியும் ஜீரணித்தும் கொண்ட ஒரு உன்னத ஆளுமை ஆகும். இந்து கடவுளர்களை பக்தி செலுத்தி வணங்கும் முறைகள் பௌத்தத்தில் தமிழ் மரபு ஊடாக புகுந்து கொண்டன. உதாரணமாக விஷ்ணு, ஸ்கந்தகுமாரன் (கந்தரகம தெவியோ) சரஸ்வதி, பிள்ளையார் (கண தெவியோ) ஆகிய வணக்க முறைகள் பௌத்தரிடம் பரவி உள்ளன. சரஸ்வதி கல்விக்குரிய தெய்வமாகும். கணேசர் வியாபாரம், தொழில் முயற்சி ஆகியவற்றின் வெற்றியை வேண்டி வழிபடும் தெய்வம். இத்தெய்வங்களை பௌத்தர்கள் "வழி படுகிறார்கள்" என்று சொல்வதை விட காணிக்கைகளைச் செலுத்தி அவற்றின் பாதுகாப்பையும் அனுக்கிரகத்தையும் வேண்டுகிறார்கள் என்பதே பொருத்தமானது. வாழ்க்கையின் துன்பங்களையும் பிரச்சினைகளையும் தணிப்பதற்கும் தீர்ப்பதற்கும் இக் கடவுளரின் பாதுகாப்பு வேண்டப்படுகிறது. தேரவாத பௌத்தத்தின் இத்தகைய நோக்கு நிலை தம்மபதத்தில் உள்ள பின்வரும் வசனங்களில் வெளிப் படுகிறது.

"மானிடர் பயத்தின் காரணமாக இயற்கைப் பொருட்களான மலைகளையும் அடர்ந்த காடுகளையும் சோலைகளையும் வணங்குகிறார்கள். இது அவர்களுக்கு நிலையான ஆறுதலையும் துன்பங்கள் யாவற்றில் இருந்தும் விடுபட்டு கொள்வதற்கான வழியையும் கொடுப்பதில்லை"

சடங்கு முறையில் அமைந்த கிராமிய நாடக அரங்கினைப் பற்றியே நான் இதுவரை குறிப்பிட்டேன். ஆனால் இது உண்மையில் இரசிப்பதற்கும் சுவைப்பதற்கும் உரிய முழுமை பெற்ற நாடக வடிவம் அல்ல. அத்தகைய நாடகவடிவம் சிங்களத்தில் உருவாவதற்கு தமிழ் மரபில் வளர்ச்சி பெற்ற "தெருக் கூத்து" உந்துதலாக அமைந்தது. நவீன நகரம் சார் சிங்கள அரங்கக் கலை தெருக் கூத்தில் இருந்து உருவான நாடகம் மூலமே உருப் பெற்றது. இந்நாடகம் ஏனைய இலக்கிய வடிவங்களான கவிதை, புனைகதை ஆகியவற்றையும் விட உயர்ச்சி பெற்று முன்னணியில் நிற்கும் கலை வடிவமாக சிறப்புப் பெற்றுள்ளது.

தமிழில் இருந்து தெருக்கூத்து அல்லது வீதி நாடகம்தென் பகுதியில் உள்ள சிங்கள கிராமங்களுக்கு ஒரு சுற்று வழியின் மூலம் வந்து புகுந்தது. தெருக் கூத்து முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் உள்ள கத்தோலிக்கர்களால் சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்காகக் கையாளப்பட்டது. கத்தோலிக்க சமய கருத்துக்களை கொண்ட கதைகளை சொல்வதற்கு தெருக் கூத்தை ஒரு சாதனமாக இவர்கள் கொண்டனர். இக்கூத்தை அவர்கள் "கர் நாடகம் என அழைத்தார்கள். என்ற தகவலை சேர். சிற்றம்பலம் கார்டினர் அவர்களுடைய நெருங்கிய உறவினர்களிடம் இருந்து நான் தெரிந்து கொண்டேன். இந்த வகை நாடகங்களை "பிலிப்பு சின்னோ" என்பவா எழுதினார். நாட்டுக் கூத்து என்று பரவலாக அழைக்கப்படும் இந்த வகையான சனரஞ்சகமான கலை வடிவம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திலும் நிலவியது. நாட்டுக் கூத்தில் தென்மோடி, வட மோடி என இருவகைகள் உள்ளன. வட மோடி என்னும் வடிவமே சிங்களவரால் பின்பற்றப்பட்டது. தென் மோடி நாடகக் கூத்தில் இன்னிசை, கலிப்பா, கொச்சகம், வெண்பா, பரணி, முதலிய இடைக்கால இசைப்பா வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன. இதற்கு மாறாக வட மோடி நாட்டுக் கூத்தில் பழைய இராகங்கள் பயன் படுத்தப்பட்டன. இந்தஇனிய இராகங்கள் சிங்கள கிராம வாசிகளையும் நகரம் சார் நாடகப் பிரியர்களையும் கவர்ந்தன. "டவர்" மண்டபத்தில் மேடை ஏற்றப்பட்ட நாடகங்களின், இனிமையான பாடல்கள் ஊடாக சிங்கள மக்கள் மத்தியில் இந்திய இசையின் இராகங்களை ரசிக்கும் இரசனை உணர்வும் விருப்பும் வளர்ந்தன. தமிழ் நாட்டுக் கூத்து மரபில் உள்ள பல்வேறு வடிவங்களை ஒப்பிட்டும் ஆராய்ந்தும் "மனமே" என்னும் நாடகத்தை நான் எழுதி நெறிப்படுத்தி மேடையேற்றினேன். இந்நாடகம் பார்வையாளர்களின் பெரும வான வரவேற்பை பெற்றது. அவர்களின் இதயத்தை தொட்டது. தமிழ் நாட்டுக் கூத்தில் உள்ள இனிமையான பாடல்களில் பரிச்சயம் பெற்று இருந்த சிங்கள நாடகப் பிரியர்கள் மனமே நாடகத்தின் இசையை விரும்பி இரசித்தனர். தமிழ் நாடகத்தின் இசை வடிவங்கள் நீண்ட வரலாற்றை உடையவை அவற்றின் அமைப்பு பரவலாக மக்கள் அறிந்துள்ள இராகங்களை தழுவியவை. உதாரணமாக "உருத்து" என்பது பாடல்களுக்கு இனிமையை சேர்க்கின்றது. "உருத்து என்பதன் பொருள் "ஆபரணம்" என்பதாகும். உருத்து விரைந்து பாடப்படுவது. இது பாடலுக்கு ஒரு தனிப்பட்ட இரசனையையும் இனிமையையும் அளிக்கும். உருத்து வேறு இசை வடிவங்களில் இல்லாத நாடகத்தில் மட்டும் காணப்படுவதான ஒரு சிறப்பு அம்சமாகும். ஒரு குறிப்பிட்ட நாடக பின்னணிக்கு உருத்து விசேட மெருகு ஒன்றை கொடுக்கின்றது. நாடகத்தின் துரித கட்டத்தின் உணர்வு நிலையை வெளிக்கொணர இது உதவுகின்றது.

புராதன கூத்து வகைகளான "சொக்கரி" "கோலம்" போல் அல்லாது நாடகம் முழுமை பெற்ற மரபு ஒன்றை கொண்டு உள்ளது. அரங்கிலே நடித்துக் காட்டுவதில் பயனில்லை எனக் கருதப்படும் பகுதிகளை எடுத்துச் சொல்லும் கட்டியக்காரன் ஒருவன் நாடகத்தில் அதன் கதையை நடத்திச் செல்ல உதவுகிறான். இதே வேளை நடிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய சுவையூான விடயங்கள் பார்வையாளருக்கு நடித்து காட்டப்படும். நாடகத்தில் நடிகமாந்தர் வட்டமாக சுற்றி வந்து ஆடும் மரபு உள்ளது. இதை சிங்களத்தில் "பரிஸ் கிறமண" என்பர் இவ்விதம் சுற்றி ஆடுவதால் நடிகர்கள் மேடையில் தோன்றும் இடம் மாற்றப்படுகிறது. இம்முறை சமஸ்கிருத நாடக மரபிலும் உள்ளது. பொருட்களை கொண்டு சித்தரித்து காட்ட வேண்டிய செயல்களை அங்க அபிநயத்தின் மூலம் நடிகர்கள் சித்தரிப்பர். இம்முறை தொன்மைக்கால அரங்க முறையுடன் நாடகம் கொண்டுள்ள நெருங்கிய உறவை எடுத்துக் காட்டுகிறது. ஆந்திர பிரதேசத்தில் பாகவத மேளா நாடகம் என்னும் வடிவம் உள்ளது. இதேபோல வங்காளத்தில் 'யாத்ரா' என்னும் வடிவம் உள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் நாட்டுக் கூத்தும் இவை போன்றே தொன்மைக்கால சமஸ்கிருத நாடகத்தில் இருந்து உருவான சனரஞ்சகமான நாடக வடிவமாகும். இவ்வரங்கக் கலை வடிவங்கள் உயர் குழாம் ஒன்றின் குறுகிய வட்டத்தில் இருந்து நாடகத்தை விடுவித்து மக்களின் மத்தியில் எடுத்துச் செல்வதற்கு செயற்பட்ட முயற்சிகளின் விளைவுகள் ஆகும். ●

நன்றி - நூலகத்திட்டம்



## விளம்பர ஞானம்




வீரமும் மயிரும் ஒன்றாக இருக்கும் பெயரைக் கொண்ட அந்தக் கொழும்புத் தினசரிப் பத்திரிகைக்கு நினைவு அஞ்சலி விளம்பரம் ஒன்று கொடுக்கச் சென்றார் நண்பர். விளம்பரம் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவ தலைவர் ஒருவர் பற்றியது. விளம்பரத்திலிருந்து 'இரத்தம்' என்ற சொல்லை எடுத்து விட வேண்டும் என்றார் விளம்பரமுகாமையாளர். (பத்திரிகையின் பிரதான நோக்கமே விளம்பரங்கள் மூலம் லாபம் சம்பாதிப்பது என்பதால் விளம்பர முகாமையாளருக்கு ஆசிரியரை விட அதிகாரமும் பலமும் அதிகம் என்பது சாதாரணமான 'ஞானம்' உள்ளவர்களுக்கும் தெரிந்த ஒரு விஷயம்!) "

உங்கள் பத்திரிகையிலேயே வேறு பல விளம்பரங்களிலும் 'இரத்தம்' என்ற சொல்லைப் பயன் படுத்தியிருக்கிறார்கள். அப்படியிருக்க எங்களுக்கு மட்டும் ஏன் வேறொரு நியாயம்?" என்று கேட்டிருக்கிறார் நண்பர்.


"வேறெந்த விளம்பரம்?" எனத் திருப்பிக் கேட்ட விளம்பர முகாமையாளருக்கு, கொழும்பில் தங்கி இருக்கும் தமிழ்க் குழுக்களின் அஞ்சலி விளம்பரங்களில் "இரத்தம்" என்ற சொல் மட்டுமல்லாமல் வேறும் பல "பயங்கரவாத சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதை நண்பர் சுட்டினார்.

"தம்பி! அது வேறு விஷயம்" என்றார் வி. மு. "அவங்கள் இயக்கம் அவங்கள் போடெண்டு சொன்னால் போடத்தான் வேண்டும். நீங்கள் அப்படியில்லை அது தான் ...."

நியாயம் தானே இயக்கங்கள் போடச் சொல்லி இவர் போடாமல் விட்டால் இயக்கங்கள் இவருடைய மண்டையில் போட்டு விடும் என்ற யதார்த்தம் அவருக்குத் தெரிகிறது.

நண்பருக்கு எங்களுடைய ஆலோசனை என்னவென்றால் அடுத்த முறை விளம்பரம் போடப் போகும் போது ஆயுதக் கலாசாரத்தைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இடுப்பில் ஒன்றைச் செருகிக் கொண்டு போவது!


## இந்த அரசியல் யாப்பு உதவாது



ஜனாதிபதி பிரேமதாசவிற்கெதிரான குற்றச் சாட்டுகளும் காமினி திஸ்ஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி போன்றோரின் கலகக் குரல்களும் அரசியல் யாப்பு தொடர்பான பிரச்சினை ஒன்றையும் முன்னே கொண்டு வந்துள்ளன. பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்ரர் முறைப்படி அமைந்த பாராளுமன்ற முறையா அல்லது அதிகாரங்கள் தனிநபரில் குவிந்துள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையா இலங்கைக்கு உகந்தது என்பதே அது. பேராசிரியர். ஏ. ஜே. வில்சன் போன்ற அரசியல் நூலோர் இலங்கையின் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஃபிரெஞ்சு ஜனாதிபதி முறைப்படியானது என்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தாலும் உண்மையில் இலங்கை ஜனாதிபதிக்கு பிரெஞ்சு ஜனாதிபதியை விட அதிகாரங்கள் கூட என்பது மட்டுமல்லாமல் 'தட்டிக் கேட்க ஆளில்லாத' ஒருவராகவே இலங்கை ஜனாதிபதி செயல்பட முடியும் என்பதும் அறியக்கிடக்கிறது. மக்களின் நலன் என்ற கோணத்திலிருந்து பார்க்கிறபோது 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பாயினும் சரி 1978 ஆம் ஆண்டு ஜனாதிபதி முறை அரசியல் யாப்பாயினும் சரி மக்களை ஒடுக்கும் பல அம்சங்களைக் கொண்டுள்ளன. இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் சிறுபான்மை இனத்துவக் குழுக்களை பொறுத்தவரை அவற்றின் இனத்துவ பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படாதது மட்டுமல்லாமல் ஏற்கெனவே சோல்பரி யாப்பில் இருந்த 29 வது சரத்தும் 1972 குடியரசு யாப்போடு பறிக்கப்பட்டு விட்டது. பாராளுமன்ற ஜனநாயகம் பழையபடி வந்தாலும் பெரும்பான்மைத் தேசிய இனத்தின் பாராளுமன்ற அராஜகமே ஏனைய தேசிய இனங்களுக்குக் கிடைக்கும். ஜனாதிபதி ஆட்சி முறையிலும் இலங்கையில், ஜனாதிபதியை எல்லாவற்றிற்கும் மேலாக "அதியுத்தமராக" கேள்வி முறையற்று உயர்த்திவிடுகிற தொழில் முறையே உள்ளது. இந்த நிலையில் பிரயோசனமாக ஏதாவது நிகழ வேண்டுமானல் அரசியல் யாப்பு முற்றாக மாற்றப்பட வேண்டும் இந்தமாற்றம் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

(அ) ஒற்றையாட்சியை நிராகரித்து, ஏனைய தேசிய இனங்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாகவும் வெளிப்படுத்துவதாகவும் இருக்கக் கூடிய சமஷ்டி அல்லது கூட்டாட்சி அமைப்பு.


(ஆ) அடிப்படை மனித உரிமைகளுக்கான ஒழுங்கான தெளிவான ஏற்பாடுகள்.




## இம்பீச்மென்ற் இனவாதம்

கொம்யூனிஸ்ட் கட்சியின் அதிகார பூர்வமான (மன்னிக்கவும் அதிகாரம் எங்கே அவர்களுக்கு இருக்கிறது, எனவே உத்தியோகபூர்வமான என்று திருத்துவோம்) ஏடான 'அத்த' இதழில் ஜனாதிபதி பிரேமதாசவை கேலி செய்து ஒரு பைலாப் பாடல் வெளிவந்துள்ளது. அந்தப் பாடலில் வடக்கே வேலுப்பிள்ளையும் தெற்கே பாஸ்கரலிங்கமும் தான் ஆட்சி நடாத்துகிறார்கள் என்ற பிரசாரத் தொனி இருக்கிறது. எல்லாத் தமிழர்களையும் புலிகளாகக் காட்டும் போக்கு "இம்பீச்மென்ற்" விவாதத்தோடு பழையபடி சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது. ஐ. தே. க. விலிருந்து வெளியேறிய அமைச்சர் ஒருவர், பாஸ்கரலிங்கம் இருக்கும் வரை புலிகளை வெல்ல முடியாது என்று ரஞ்சன் விஜேரத்தின தன்னிடம் சொல்லியதாகக் கூறுகிறார்.


அரசுக்கும் ஜனாதிபதிக்கும் விசுவாசமாக இருக்கும் அதிகாரிகளுக்கே புலிப்பட்டம் சூட்டப்படுகிறபோது வடக்கு கிழக்கு அப்பாவிப் பொதுமக்களை இந்த அரசு என்ன செய்யும் என்பது சொல்லாமலே தெரிகிறது.





*சரிநிகர், மாதம் ஒருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.*


*எல்லாத் தொடர்புகளுக்கும்;*
*ஆசிரியர்*
*'சரிநிகர்'*
*6, அலோசாலை,*
*கொழும்பு - 3.*




நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இல 6 அலோசாலை கொழும்பு - 3 தொலைபேசி - 574047.


# மணலாற்று யுத்தம்



முல்லைத் தீவு, பதவியாப் பகுதிகளில் இலங்கை ராணுவம் உக்கிரமான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதற்குரிய காரணம் புலிகளைத் துரத்தியடிப்பது மட்டுமல்ல.சொல்லப்பட்ட சேதி; புலிகளுடனான கடும் போர். சொல்லப்படாத சேதி; வடக்குக் கிழக்கு மக்களின் பிரதேசங்களைக் கூறு போடுவது.

மணலாறு, 'வெலி ஓயா' ஆக மாறியது ஒரு "அதிரடிக் குடியேற்றத் திட்டம்" என்பது எம்மெல்லோர்க்கும் தெரிந்தது தான். (வெலி ஓயா என்பது சிங்களப் பெயர் என்று நினைத்தவர்களுடைய மொழியறிவுக்கு ஒரு சின்ன சவால்; "வெலி" என்பது சிங்களத்தில் மணல், மண் என்பதைக் குறிக்கும். பழைய தமிழில் வாலுகம் என்பதற்கு மணல் என்று பொருள். சங்க இலக்கியங்களில் "உயவை" என்ற சொல் வருகிறது. அதன் பொருள்; காட்டாறு உயவை 'ஓயா'வாகவும் வாலுகம் "வெலி" ஆகவும் திரிந்தாலும் மூலம் ஒன்றுதான் என்கிறார்கள் மொழி நூலோர்) ஏனைய குடியேற்றத் திட்டங்களை விட மணலாற்றுத் திட்டத்திற்கு இருக்கிற கேந்திர முக்கியத்துவம் என்னவென்றால், அது முல்லைத் தீவு மாவட்டத்தையும் திருகோணமலை மாவட்டத்தையும் முற்றாகத் துண்டித்து விடும் பெரியதோர் சதியின் முக்கியமான அம்சமாகும். இந்தக் குடியேற்றத் திட்டங்களுக்கு ராணுவத்தினரே பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள். சில திட்டங்களுக்கு முக்கியமான ராணுவ உத்தியோகத்தர்களின் பெயர் கூடச் சூட்டப்படுகிறது.

உதாரணமாக பிரிகேடியர் ஒருவர் முக்கிய பங்கு வகித்தமையால் முல்லைத்தீவு பதவியாப் பிரதேசத்தில் 'ஜானகபுர' உருவாகியுள்ளது.

மணலாற்றுப் பகுதியை முற்றிலுமாகக் கைப்பற்றி அளம்பில் செம்மலை போன்ற இடங்களும் இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டில் வந்து குடியேற்றத் திட்டங்களும் முற்றாகி விடுமெனில் முல்லைத்தீவும் திருமலை மாவட்டமும் துண்டிக்கப்பட்டு விடும். ஏற்கெனவே கொக்கிளாய், நாயாறு, தென்னமரவாடி போன்ற இடங்கள் முற்றாகப் பறிபோய் விட்டன.

இந்தப் பின்னணியில் மணலாற்றில் இலங்கை அரசிற்குக் கிடைக்கிற வெற்றி வடக்கு கிழக்கு மக்களின் பிரதேச ஒருமைப் பாட்டிற்குக் கிடைக்கிற முக்கியத்துவம் வாய்ந்த தோல்வியாகும்.

மணலாற்றுத் தாக்குதல்களை இராணுவம் வெற்றிகரமாக முடிக்குமானால் ஆனையிறவு முகாம் இலங்கை அரசுக்கு முக்கியத்துவப்படாது. சில வேளைகளில் அதனை விட்டு வெளியேறி விடவும் கூடும். கிழக்கைப் பிரிப்பதும் முல்லைத் தீவு மாவட்டத்தின் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை வசப்படுத்துவதுமே நீண்ட கால நோக்கில் இலங்கை அரசின் அரசியல், ராணுவ நலன்களுக்கு உகந்தது. குடா நாட்டை யார் ஆண்டாலென்ன இலங்கை அரசு அக்கறைப்பட வேண்டியதில்லை, மணலாறு மட்டும் முற்றாக அரசிடம் வீழ்ந்து விடுமானால்.... இவ்வாறு வடக்கு கிழக்கு மக்களின் பிரதேச ஒருமைப்பாட்டைச் சிதைப்பது டீ. எஸ். செனநாயக்க குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்த போதே கருக்கொண்டு விட்டாலும், ஜே. ஆர். ஜயவர்த்தன, சிறில் மத்தியூ, காமினி திஸாநாயக்க, மற்றும் மகாவலி அபிவிருத்திச் சபையின் தலைவர் என். ஜீ. பி. பண்டிதரத்ன ஆகியோரே முக்கியமாக வடக்கு கிழக்கு மக்களின் பிரதேச ஒருமைப் பாட்டைக் குலைத்தவர்கள். உத்தியோகபூர்வமான குடியேற்றத் திட்டங்களைத் தவிர அத்துமீறிய/ கள்ளக் குடியேற்றங்களையும் (encroachments) இவர்கள் ஊக்குவித்தார்கள். மாதுறு ஓய கள்ளக் குடியேற்றங்களுக்கு காமினி திஸாநாயக்காவும் பண்டிதரத்தினவும் பொறுப்பானவர்களாக இருந்தார்கள். பண்டிதரத்தினவே அக்காலப் பகுதியில் U.N.P யின் தலைவராகவுமிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முயற்சிகளுக்குச் சமாந்தரமாக அப்போது தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி வன்னிப் பிரதேசங்களில் தமிழ்க் குடியேற்றங்களை ராணுவத்தைப் பயன்படுத்தி அடித்துத் துரத்தினார். டொலர் ஃபாம், கென்ற் ஃபாம் என்பனவும் காந்தீயத்தால் உருவாக்கப்பட்ட குடியேற்றங்களும் இவ்வாறு அழிக்கப்பட்டன. மகாவலித் திட்டம் என்பதுகூட உண்மையில் சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் பூகோள விஸ்தரிப்பேயன்றி வேறொன்றுமல்ல.

நடைமுறைப்படுத்தப்பட்ட எல்லா மகாவலி உப திட்டங்களிலும், குடி யேற்றங்களிலும் அந்த அந்தப் பிரதேசங்களில் ஏற்கெனவே இருந்த குடிசன அமைப்பு முறை இனத்துவ ரீதியாகக் கணக்கிலெடுக்கப்படாமல், முற்று முழுதாக சிங்கள பௌத்தர்களே குடியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் மட்டும் 1946 இலிருந்து 1959 இற்கிடையில் சிங்கள மக்களின் தொகை ஐந்து மடங்காக அதிகரித்துள்ளது. 1959 இலிருந்து 1976 இற் கிடையில் இரு மடங்காக அதிகரித்துள்ளது. ஒட்டு மொத்தமாக முப்பது வருடங்களில் பத்து மடங்கு அதிகரித்துள்ளது.

எந்தச் சிங்கள பௌத்தத் தலைவரும் அரசும் இந்தக் குடியேற்றக் கொள்கையிலிருந்து பின்வாங்கப் போவதில்லை. இதுதான் இன்றைய இனத்துவப் பிரச்சினையின் தீர்வுக்கான மிக முக்கியமான தடைக்கல்லாகும், "பாரம்பரியப் பிரதேசங்கள்" நிச்சயமாகவே ஆயிரக் கணக்கான வருடப் பழமை வாய்ந்த பாரம்பரியத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை.

வரலாற்றையும், அரசியல் மயப்படுத்தப்பட்ட தொல் பொருளாய்வையும் முன்வைத்து பாரம்பரியப் பிரதேசங்களை தங்களுடையது என்று அரசு உரிமை கொண்டாடுகிறபோது வடக்குக் கிழக்கு மக்கள் கலவரப்படத் தேவையில்லை. வடக்கு கிழக்கு மக்கள் எங்கெங்கு பாதுகாப்பாக வாழ முடியுமென்று தாங்கள் கருதுகிறார்களோ அந்தந்தப் பிரதேசங்கள் அவர்களுடைய பாரம்பரிய நிலங்கள் தான். ஏனென்றால் இன்றைய சூழலில் பாரம்பரியப் பிரதேசம் என்பது வரலாற்றுக் கோட்பாடு அல்ல! அது அரசியல் கோட்பாடு.

சரிநிகர் மாத இதழ் இல 6, அலோசாலை, கொழும்பு 3. இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்திற்குமான இயக்கம் .